**கிண்ணியா நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிண்ணியா நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிண்ணியா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உள்@ராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்@ராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவுப் பட்டியலின் கூட்டுமொத்தம் மற்றும் வருமானச் செலவினக் கணக்கில் காட்டப்பட்ட மானியச் செலவினங்கள் என்பவற்றிற்கு இடையே ரூபா 410,073 இனால் வேறுபாடு இனங்காணப்பட்டது. | தவறுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | சரியான தொகையை கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ஆ) | கடந்த வருடத்தின் திசெம்பர் மாத சம்பள மீளளிப்புத் தொகை மீளவும் மீளாய்வாண்டின் வருமானமாகக் காட்டப் பட்டமை மற்றும் மீளாய்வாண்டிற்கான திசெம்பர் மாதம் பெறவேண்டியிருந்த போதிலும் மீளளிப்புத் தொகை குறைத்துக் காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டின் கேறிய வருமானக் கொடை ரூபா 578,037 பெறுமதியினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | தவறுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் சபையின் முடிவுக் கணக்குகளில் காட்டப்பட்ட நடை முறையல்லா சொத்துக்களின் கூட்டு | இது தொடர்பாக தரவுத்தளம் ஒன்றை (Data Base) | உரிய ஆவணங்களை முறைப்படி பேண நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தம் ரூபா 145,790,939 தொடர்பாக நிலையான சொத்துப்பதிவேடு, காணி உறுதி மற்றும் விபரமான பட்டியல் என்பன முறையாக முகாமையினால் பேணப்பட்டிருக்க வில்லை. இதனால் இவற்றின் பௌதீக இருப்பை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாது போனது. | உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | விபரமான பட்டியல் பதிவேடு மற்றும் பேரேடுகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் வழங்கப்படாமையபல் 03 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 18,403,832 தொகை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | குறிப்பிடப்பட்ட தவறுகள் ஏற்றுக் கொள்ளப்படு கின்றது. | நிதிக் கூற்றுக்களில் காணப்படும் மீதிகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மூலதன வருமானம் மற்றும் மூலதன வருமானப் பெறுவனவிற்கான பட்டியல் என்பவற்றிற்கு இடையே ரூபா 856,188 வேறுபாடு இனங்காணப்பட்டது. | தவறுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | சரியான தொகையை கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்கம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவு | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப் படல் வேண்டும். |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டு நகர சபை கட்டளைச் சட்டம், அத்தியாயம் 255 இன் பிரிவு 44 | நகர சபைக்குட்பட்ட வீதிகளின் விபரங்கள் 3 மொழியிலும் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டிருக்கவில்லை. | இதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப் படுகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் இல | சபையின் பாவனையிலுள்ள வாகனங்களின் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு | இனிவரும் காலங்களில் முறையாக அனுப்பப் படும். | நிதி ஒழுங்கு விதிகளிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1646 | என்பவற்றின் மூலப்பிரதிகள் மாதாந்தம் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) | அரச நிதிச் சுற்றறிக்கை இல 01/2014 திகதி 17 பெப்ரவரி 2014 | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் (Annual Action Plan) சுற்றறிக்கையின் படி சபையின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கி தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்படு கின்றது. | சுற்றறிக்கையின் படி செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும். |
| (உ) | 29 திசெம்பர் 2016 ஆம் திகதிய பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை இல 30/2016 ஆம் பந்தி 3.1 | சபையின் ஒரு வாகனத்திற்கான எரிபொருள் பரீட்சிப்பு மீளாய்வாண்டில் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது இதற்கான நடவடிக்கை முன்னெடுக் கப்படுகின்றது. | சுற்றறிக்கைக்கு அமைய எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 5,021,055 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 2,146,961 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) வீதவரி மற்றும் வரி | | |
| மீளாய்வாண்டின் இறுதி வரை ஆதனவரி நிலுவையாக காணப்பட்ட ரூபா 5,294,267 தொகையினை அறவீடு செய்வதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆதனவரி நிலுவை தொடர்பில் தற்போதைய நிலைமை மற்றும் நாட்டின் தொற்று நோய் காரணமாக எம்மால் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | ஆதனவரி நிலுவையை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

ஆ) குத்தகை வருமானம்

| | | |
|---|---|---|
| நகர சபையினால் பொதுச் சந்தை மற்றும் இறைச்சிக் கடைகள் வருடாந்தம் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆன் திகதி ரூபா 36,315,069 நிலுவையாக காணப்பட்ட போதிலும் 05 வருடங்களிற்கு மேற்பட்ட நீண்ட காலநிலுவைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நகரசபையின் குத்தகை வருமான நிலுவைகளை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| கிண்ணியா, குறிஞ்சாகேணியில் விபத்து ஏற்பட்ட படகு சேவைக்கான அனுமதி சபையின் தலைவரால் 2021.10.28 ஆம் திகதிய கடிதம் மூலம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக சபைத் தீர்மானங்கள் பெறுகை நடைமுறை மற்றும் ஆவணங்கள் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருப்பதால் கருத்துக் கூற முடியாதுள்ளது. | சேவைகள் நிறைவேற்றும் போது அதற்கான துணைச் சட்டங்கள் தயாறிக்கப்பட்டு அதற்கமைய சபையினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ரூபா 519,585 பெறுமதியான 03 கணனி கொள்வனவு தொடர்பில் பெறுகை வழிகாட்டி 2006 பிரிவு 8.9.1 இன் படி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. அத்துடன் வழங்கல் நிறைவு செய்யப்பட வேண்டிய காலமும் பெறுகை வழிகாட்டி 2006 இன் பிரிவு 3.4.2(அ) இன் படி கொள்வனவுக் கட்டளையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தவறுகள் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. | பெறுகை வழிகாட்டியின் படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பெறுகை நெறிமுறைகளுக்கு முரணான வகையில் சபையின் உத்தியோகத்தர் ஒருவர் தலைமைத் தாங்கும் அனுமதிக்கப்பட்ட சனசமூக நிலையமொன்றுக்கு ரூபா 2.57 மில்லியன் பெறுமதியான 04 வேலைகள் வழங்கப்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் இக்குறைபாடு ஏற்படாமல் நிவர்த்திக்கப்படும். | உரிய சட்ட ஏற்பாடுகளிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்** -

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதி ஒழுங்கு விதி 880 மற்றும் பிணைப்பணக் கட்டளைச் சட்டத்திற்கு (அத்தி 612) அமைவாக பிணைப்பணம் வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிணைப்பணம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடு மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2021 நொவெம்பர் 25 ஆம் திகதிய PT/14/2021 ஆம் இலக்க மாகாணத் திறைசேரி சுற்றுநிருபத்திற்கமைய நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2021 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப் பட்டிருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 மே 31 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் உரிய காலத்தில் பதில் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டிலிருந்து உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளைத் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திறமையான உத்தியோகத்தர் நியமிக்கப்படும் பட்சத்தில் உள்ளகக் கணக்காய்வாளராக நியமிக்கப்படுவார். | இனிவரும் காலங்களில் மிகச் சிறப்பான முறையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| பாதீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவினம் மற்றும் உள்ளபடியான மீண்டெழும் செலவினத் திற்குமிடையே 2,578,624 மில்லியன் தொடக்கம் 25,151,529 மில்லியன் வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப பட்டிருக்கவில்லை என அவதானிக்கப பட்டுள்ளது. | சிறந்த பாதீட்டுடனான கணக்கியல் நடவடிக்கை இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். | வினைத்திறனான முறையில் பாதீட்டை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2017 இன் 19ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சட்டத்திக்கு அமைவாக, 2030 ஆம் ஆண்டு அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவு மட்டம் தொடர்பான சரியான மதிப்பிடல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு சபையின் செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் பேணப்பட்டிருக்க வில்லை. | தனியான செயலாற்றுகை அறிக்கை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிகாட்டிகள் தொடர்பான தகவல்களை வினைத் திறனான முறையில் பேண நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |